# சிந்திக்கும் வேளையில்...
# மத்திய - மாநில உறவுகள் தேவை ஒரு மறு சிந்தனை

மத்திய - மாநில அரசுகளின் உறவுகளைப் பற்றிய விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்திராகாந்தி பிரதமராக இருந்தபொழுது மத்திய - மாநில உறவுகளைக் கண்டறிய சர்க்காரியா குழுவை அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்தக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு இதுவரை சரிவர நிறைவேற்றாமல், காலந்தாழ்த்தி வருகிறது.

மத்திய - மாநில அரசுகளின் உறவுகளை ஆராய்ந்த சர்க்காரிய குழு, தன்னுடைய அறிக்கையில் இரு அரசுகளின் உறவை ஓரளவு சமன் செய்வதற்கு முயன்றுள்ளது. ஆனால், பிரச்னைகளைத் தீர்க்க அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த பரிந்துரைக்கவில்லை. சில மரபுகள், அரசியல் அமைப்புச் சட்டத்தின் சில பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலம் பிரச்னைகளைத் தீர்க்க சர்க்காரியா குழு முயன்றுள்ளது. மத்திய - மாநில அதிகார வரம்புப் பட்டியல்களில் இடம் பெறாத விபரங்களில், வரி விதிப்பது தவிர, மற்றவை பற்றி சட்டம் இயற்றும் அதிகாரத்தை மத்திய அரசிடமிருந்து பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்ற சர்க்காரிய குழு விரும்புகிறது.

மாநிலங்களின் வரி விதிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மனநிறைவளிக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன. எனினும், இம்மாநிலங்களின் நோக்கங்களை அடைவதற்குத் தேவையானவற்றை நிறைவு செய்ய அவைகள் போதியனவாக இல்லை. தற்போது கிடைக்கப் பெறும் நிதி ஆதாரங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு நிகராக இல்லை. மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் மொத்த நிதி ஆதாரத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்காக அடிப்படை வருமான வரியுடன் மேல் வரியை இணைத்து ஆயத் தீர்வையில் மாநிலங்களின் பங்கினை 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக அதிகரிக்க வகை செய்யலாம். மாநிலங்களால் பகிர்ந்து கொள்ளப்படும் நிதி ஆதாரத்தில் கூட்டு நிறுவன வரியையும் சேர்ப்பதோடு மாநிலங்களுக்கு அத்தொகையிலிருந்து 60 சதவீதம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

திட்டங்களுக்காக அளிக்கப்படும் மத்திய நிதி உதவியில் கடன் பகுதியாக அளிக்கப்படும் தொகையைக் குறைப்பதன் மூலம், மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க உதவும் வகையில், மத்திய நில உதவி முறையை மாற்றி அமைக்க வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275 - ஆம் பிரிவில் கீழ் மத்திய அரசு வழங்கும் மானியங்கள், மாநிலங்களின் வருவாய்ப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு மாறாக, ஒவ்வொரு மாநிலத்தின் குறிப்பிட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட வேண்டும்.

வறட்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தக்க நிவாரணம் அளிக்க மாநிலங்களுக்கு இயலும் விதத்தில் ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையைத் திருத்தியமைக்க வேண்டும். நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டில் தற்பொழுது உள்ள அளவிலேயே துவக்க உதவித் தொகைக்கு வகை செய்யலாம். இருப்பினும், நிவாரணப் பணிகளுக்குரிய மத்திய உதவி ரிட்டம் சாராப் பணிகளுக்கு

வழங்கப்படும் முறையில் இருக்க வேண்டும். அப்போதுதான் திட்ட முதலீடு குறையாமல் இருக்கும். வறட்சி நிவாரணப் பணிகள் குறித்த நிதி உதவியில் 75 சதவீதம் மானியமாகவும், 25 சதவீதம் கடனாகவும் இருக்க வேண்டும். வெள்ளம் - புயல் நிவாரணப் பணிகளைப் பொறுத்தமட்டில், வழங்கப்படும் மத்திய நிதி உதவியானது 100 சதவீதம் மானியமாக அமைய வேண்டும்.

மத்திய அரசு திட்ட உதவி வழங்குவதற்கும் வழிமுறைகள் எளிமைப்படுத்தப்பட வேண்டும். மாநிலங்களின் நபர் வாரியான வருமானத்தைக் கணக்கிடுகையில் நிதி உதவி அடிப்படையைத் தீர்மானிப்பதற்கு 5 ஆண்டு கால சராசரிக் கணக்கை பின்பற்ற வேண்டும். மாநிலங்களுக்குக் கணிசமான அளவு கூடுதல் வள வாயில்களை அளிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 269 - ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாநில அரசுக்குச் சேர வேண்டிய நிகர சிறுசேமிப்புத் தொகையை, பங்கை, 72 சதவீதம் அதிகரிக்க வேண்டுமென்று நிதிக் குழு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். சிறு சேமிப்பைப் பொறுத்தமட்டில் திட்டம் சாராப் பணிகளுக்கான, மூலதனப் பற்றாக்குறைக்கு என ஒதுக்கப்படும் நிதி உதவி மானியமாகக் கருதப்பட வேண்டும். உருக்கு, பெட்ரோலியப் பொருள்கள் முதலியவற்றின் விலையை மத்திய அரசு பலமுறை அதிகரிப்பதன் காரணமாக, மாநிலத்தின் நிதி வாயில்கள் குறைந்து கொண்டே வருகின்றன. மாநிலத்திலிருந்து வள வாயில்களை மத்திய அரசுக்கு மாற்றுவது இவ்விலை உயர்வால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றாகும். ஆகவே, மத்திய அரசு நிர்ணயித்த விலையில் பொருள்கள் விற்கப்படும் நிலைகளில் அதிகரிக்கப்பட்ட ஆயத் தீர்வை என்ற வகையில் இந்த விலை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைக்குமாறு எட்டாம் நிதிக் குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மத்திய அரசின் வருவாய்க் கணக்கில் உள்ள வரவுகளிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படும் மொத்தத் தொகை குறைந்துகொண்டே வருகிறது. 1982-83 -இல் இது 23.23 சதவீதம். இத்தொகை வருங்காலத்தில் 40 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கக் கூடாது. மத்திய - மாநில உறவு முறையில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்ட அனுபவத்தைக் கருத்திற் கொண்டு நிதி தொடர்பாக பரிசீலனை செய்யவும், சட்டப்படியான தக்க அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து நிதி ஆணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்றும், இந்த ஆணைக் குழுவில் மாநிலங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்றும், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே நிதி வாயில்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்க அரசியலமைப்பில் தக்க திருத்தங்களைச் செய்யவும், இது தொடர்பாகப் பிற சட்டங்களை இயற்றவும், நிதியாணைக் குழு பரிந்துரைக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதெனவும் தென் மாநிலங்களின் முதல்வர்கள் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

வேளாண் விளைபொருளுக்கு விலை நிர்ணயிக்கும் முறைமை தற்போது நன்றாக இல்லை. உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் விவசாயிகளுக்குக் கிட்டுகிறதா எனக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. இந்தவகையில் விவசாயிகளுக்கு மாநில அரசுகள் மானியம் மற்றும் உதவித் தொகை வழங்குவதன்மூலம் ஏராளமாகச் செலவாகிறது. உற்பத்திச் செலவு, உற்பத்தித் திறன், ஊக்கத்

தொகை, அங்காடி நிலவரம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு விவசாயிகள் சங்கங்களுடன் கலந்தாலோசித்து மாநில அரசுகள் விலையை வரையறை செய்ய வேண்டும். இவ்வாறு மாநில அரசு நிர்ணயிக்கும் நியாயமான விலைக்கு ஏற்ப கடன் வசதி அமைய வேண்டும். மாநில அரசுகளின் கட்டுப்பாட்டையும் மீறி விளைபொருளுக்கு நல்ல விலை கிடைக்காமல் போனால் மத்திய அரசு திட்டம் சாரா வகையில் தேவையான உதவித் தொகையை தேவைக்கேற்ப வழங்க வேண்டும்.

விளைபொருள்களை மாநில அரசுகளோ, கழகங்களோ விற்கவும், கொள்முதல் செய்யவும், மத்திய அரசிடமிருந்து முன்னொப்புதல் பெறுவதற்காகக் காத்திராமல் வங்கிகளிடமிருந்து தேவையான கடன் வசதியைப் பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசின் சார்பில் மாநில அரசுகள் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பான செலவினை மத்திய அரசு திருப்பித் தரவேண்டும். சான்றாக, இரயில்வே துறையினருக்கு காவலர் சேவையை மாநில அரசுகள் வழங்குகின்றன. இதற்கான செலவை மத்திய அரசு திருப்பித் தர வேண்டும்.

மத்திய - மாநில அரசுகளின் உறவு, மாநிலங்களுக்கிடையே அமையும் உறவு பற்றிய குறிப்புகளை அரசியலமைப்பில் இடம் பெறச் செய்து அவற்றிற்கு மாறிவரும் புது உறவுகளுக்கு ஏற்றபடி தெளிவான பொருள் விளக்கம் அமையவும் வகை செய்ய வேண்டும். கனிப் பொருள்கள் மீது உரிமைத் தொகை பெறுவது சில மாநிலங்களுக்கு வருவாய்த் தொகைகள் வகுக்கும் வாயிலாக அமையலாம். பெரிய கனிப் பொருள்கள் மீதான உரிமைத் தொகை வீதத்தை மத்திய அரசே திருத்தியமைக்கக் கூடியதாய் உள்ளது. இந்த கனிப் பொருள் விற்பனையாகும் அங்காடி விலை விகிதாசாரத் தொகை வீதத்தை அவ்வப்போது திருத்தியமைக்க மாநிலங்களுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளை பொறுத்த வரையில் வறட்சிப் பணிகளையும் பிற துயர் துடைப்புப் பணிகளையும் மேற்கொள்ள உரிய காலத்தில் போதிய மத்திய நிதி உதவி வழங்கப்பட வேண்டும். வழக்கம்போல் திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதைத் தவிர, தனியாக இந்த நிதி உதவி வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் சில்லறைச் செலவு நிதியை அதிகரித்து நிதி தொடர்பாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். தென்மாநில முதல்வர்கள் கூட்டத்தில் மேற்சொன்ன பிரச்னைகளில் போதுமான கருத்து நிலவியது.

காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் தனி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதைப் போல மற்ற மாநிலங்களுக்கும் உரிமைகளை வழங்குவதில் ஏன் மத்திய அரசு மந்தநிலை காட்டுகிறது என்பது தெரியவில்லை. மத்திய - மாநில உறவுகளில் பிரச்னைகள் எழுந்தபொழுது அதை அறிந்து, தீர்க்க ஒரு மத்திய - மாநில உறவு மன்றம் அமைக்கப்பட வேண்டும். இது உச்சநீதிமன்றம் போன்ற அமைப்பாக இயங்க வேண்டும். அரசியல் சட்டத்தின் 8 -ஆவது அட்டவணை குறிப்பிட்டவாறு அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறு மத்திய - மாநில உரிமைகளில் அவ்வப்போது பல்வேறு கோணங்களில் பல்வேறு சாயல்களில் பிரச்னைகள் எழுந்த வண்ணம் இருக்கின்றன.

இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் தேவை ஒரு மறு சிந்தனை. அந்தப் புதிய வெளிச்சத்தில் மாநிலங்களுக்குச் சேர வேண்டிய அதிகாரங்களை மத்திய அரசு உடனடியாக கவனித்து வழங்க வேண்டும். ஒரு சங்கிலியின் வலிமை என்பது அதனுடன் இணைந்துள்ள ஒவ்வொரு வளையத்தின் வலிமையைப் பொருத்ததாகும். அதைப்போல் இந்தியாவின் வலிமை அதனுள் அடங்கியிருக்கும் மாநிலங்களின் வலிமையே ஆகும். இதை உணர்ந்து மத்திய - மாநில அரசுகள் சம அளவில் இருந்தால்தான் ஜனநாயகம் சரியாக இந்தியாவில் இயங்கும். மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை தவறான கண்ணோட்டத்துடன் பிரிவினை வாதம், இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் என்ற மாயையில் பிரச்னைகளை அணுகக்கூடாது.

தினமணி, 25.03.1994